## 6. அறிவிப்புகள்.

### தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது.

(முற்பகல் 10-30)

### (இ) 1975 ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/75)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, "1975 ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 5/1975) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என முன்மொழிகிறேன்.

---

* 5-3-1975-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS